**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**அனுப்புநர்**

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்
மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற
உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**திருவள்ளுவர் ஆண்டு 2055 / குரோதி வருடம் / ஆனி 19**

**ந.க.எண் : 4393/2024 / எம்சி. 8 நாள் 03.07.2024**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 08.07.2024 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு மாமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுதல் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் **திருவள்ளுவர் ஆண்டு 2055 / குரோதி வருடம் / ஆனி மாதம் 24 ஆம் நாள் ( 08.07.2024 ) காலை 10.30 மணிக்கு மாமன்ற சிறப்புக் கூட்டம்** மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒப்பம்) சிவகுரு பிரபாகரன்**
**ஆணையாளர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**நகல் :**

துணை ஆணையாளர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சிறப்புக் கூட்டம் - ஜூலை 2024

## நிகழ்ச்சி நிரல்


| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) தமிழ்த்தாய் வாழ்த்து<br>ஆ) திருக்குறள் வாசித்தல்<br>இ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்கள்** | |
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி – மாண்புமிகு மேயர் அவர்கள், தனது பதவியை ராஜினாமா செய்தது – மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பித்தல் - தொடர்பாக | 2 |

ஆ) **திருக்குறள்**

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி.

குறள் - 542

**விளக்கம்**

வான்மழை பொழிய உயிர்கள் செழிக்கும். வானியல்நோக்கி உலகியல் அமையும். தலைவன் நல்லாட்சி நோக்கியது குடிமக்கள் வாழ்வு.

திருவள்ளுவர்.

---------------------------------------------------------------------------------

இ) **தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – மாண்புமிகு மேயர் ஆ. கல்பனா அவர்கள், மேயர் பதவியை ராஜினாமா செய்தது – மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பித்தல் - தொடர்பாக

பார்வை - மாண்புமிகு மேயர் ஆ. கல்பனா அவர்களின் கடிதம்
நாள் 01 .07.2024

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் திருமதி. ஆ. கல்பனா அவர்கள், மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பித்துள்ள பார்வையில் காணும் கடிதத்தில், தான் வகித்து வரும் மேயர் பதவியை ராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆ. கல்பனா அவர்கள், மேயர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளதை மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண். 831/2022/எம்.சி.8

---